கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்), காஞ்சிபுரம் (பக்கம் )

**O.S. No.:- 215/2010**

**-----**

**2019** ம் ஆண்டு நவம்பர் திங்கள் **13** ம் நாள் **Dw.1**

என்பவரின் சாட்சியாகிய **Thiru.Gokula Rao.N.** நபரின் வாக்குமூலம் (**1876** ம் ஆண்டின் **10** விதியின் படி )திரு**. Mohanraj, Junior Assistant,** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது**.**

பெயர் - **Thiru.Gokula Rao.N.** விலாசம் -

த/பெ - திரு**.**

வயது -

மதம் -

தொழில் - கைபேசி எண் -

வாதி தரப்பில் பி.வா.சா.1சாட்சியின் குறுக்கு விசாரணை=

இந்த வழக்கில் நான் 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். வாதி 1முதல் 3 வரை உள்ளவர்கள் என் தந்தையின் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். என்னுடைய தாத்தா பெயர் எத்திராஜுலு நாயுடு என்றால் சரிதான். என் தாத்தாவின் தந்தையார் பெயர் ராகவல் நாயுடு என்றால் சரியல்ல வைராகவல் நாயுடு ஆகும். ராகவல் நாயுடுக்கு, கோவிந்தநாயுடு என்ற மகனும், எத்திராஜுலு நாயுடு என்ற மகனும், இதை தவிர மகள்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல, கோவிந்தநாயுடு என்பவர் முதல் மனைவியின் மகன் ஆவார், எத்திராஜுலு நாயுடு என்பவர் இரண்டாம் மனைவியின் மகன் ஆவார். மேற்படி சங்கதிகள் எல்லாம் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நான் தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல தவறு. என்னுடைய பிறந்த தேதி என்ன என்றால் 24.12.1979 ஆகும். ராகவல்நாயுடுக்கு பெண் வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.51ல் ராகவல்நாயுடுக்கு பெண்வாரிசுகள் இருந்தார்கள் என்பதை காட்டவில்லை என்றால் காட்டவில்லை, அவசியம் இல்லை. கோவிந்தநாயுடுக்கும், எத்திராஜுலு நாயுடுக்கும் அவர் தந்தையார் ராகவல் நாயுடு மூலம் தான் சொத்துக்கள் கிடைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, சில சொத்துக்கள் கோவிந்த நாயுடுக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்திருக்கலாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.10 ஆவணமானது பூலோகம்மாள் பெயரில் தாக்கல் ஆகிய பட்டா என்றால் சரிதான். அந்த பட்டா அவர்களுக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் கோவிந்தநாயுடு மூலமாகவும், சில சொத்துக்களை அவர் அடமானம் வாங்கியது மூலமாகவும் கிடைத்தது. பி.வா.சா.ஆ.10 ஆவணமான யூடிஆர் பட்டாவில் எத்தனை சர்வே எண்கள் உள்ளது என்றால் 6 சர்வே எண்கள் உள்ளது. பி.வா.சா.ஆ.7 ஆவணமானது பூலோகம்மாள் எனக்கு எழுதிக் கொடுத்த

பதிவு செய்யப்பட்ட உயில் என்றால் சரிதான். மேற்படி உயில் எழுதும் போது நான் இளவனாக (மைனர்)இருந்தேன் என்றால் சரிதான். பூலோகம்மாள் மேற்படி ஆவணத்தை எழுதும் போது அவருக்கு வயது 80 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சுமார் வயது 80 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் இருக்கும் ஆறு சர்வே எண்களை தவிர வேறு சொத்துக்கள் பி.வா.சா.ஆ.7ல் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள ஆறு சர்வே எண்கள் தவிர்த்து மூன்று வேறு சர்வே எண்களும் சேர்த்து உயில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், அதுமட்டுமில்லாமல் பூலோகம்மாளுக்கு வாரிசு இல்லாததால் வாரிசாக என்னை வாரிசுதாரராகவும், இதில் தவிர எனக்கு காணப்படாத மற்றும் விட்டுப் போன சொத்தும் எனக்கு உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.313/5 செண்டு 26 இருமுறை வந்துள்ளதா என்றால் வந்துள்ளது, தட்டச்சுப்பிழை ஆகும், அதே செண்டு தான் செண்டு எதுவும் மாறவில்லை. பூலோகம்மாளுக்கு வயது 80 என்பதால் அவர் நல்ல மனநிலையில் அல்லது நிதானத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை என்பதால் தான் சரியாக படித்து பார்க்காமல் இரண்டு முறை அடிக்கப்பட்டு இருந்த போதும் அதுவும் சரி என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் உயில் சந்தேகத்திற்கு அப்பால் நிறுபிக்கப்பட்ட ஆவணத்தை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மூலமாக பெறப்பட்டு தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.11 ஆவணம் தான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இருந்து வாங்கிய பூலோகம்மாள் உயிலை மெய்ப்பிப்பதற்கான சான்று என்று சொன்னால் சரிதான். நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் சர்வே எண்.313/5ஐ நானும் இரண்டு முறை மனுவில் குறிப்பிட்டு இருந்தேனா என்றால் ஞாபகம் இல்லை, மேற்படி தவறானது தற்போது தான் எனக்கு தெரிந்தது. 5,6,7 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் யார் என்றால் திரு.ஆர்.அன்பழகன் வழக்கறிஞர் மட்டும் தான் தெரியும், அவருடன் திருமதி.அனிசா வழக்கறிஞர் உள்ளார். உயில் மெய்ப்பிக்கப்பட்ட (Letter of Administration )பிறகு தான் என் பெயருக்கு பட்டா மாற்றினேனா என்றால் அந்த உயிலானது பதிவு செய்யப்பட்டதால் நான் மேஜராகி எனக்கு தெரிந்த உடன் உயிலை என் பெயருக்கு மாற்றி விட்டேன். என்னிடம் காட்டப்படும் பட்டா தான் என் பெயருக்கு மாற்றப்பட்ட பட்டா என்றால் சரிதான் ஆனால் இந்த வழக்கு சொத்து சம்பந்தப்பட்டது அல்ல. பி.வா.சா.ஆ.7,10,11 ஆவணங்களும் இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்டது அல்ல தான் என்று சொன்னால் தவறு வழக்கின் உரையின் வழக்கிற்குரிய மூலகாரணமாக வாதியால் தெரிவிக்கப்பட்டதால் அதை நிறுபிப்பதற்காக மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன். பி.வா.சா.ஆ.7,10,11 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லை என்று சொன்னாலும், நீதிமன்றத்தை குழப்பதற்காக நான் தாக்கல்

செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1ம் ஐயிட்ட சொத்து என் தாத்தா எப்படி கிரையம் பெற்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் என் தாத்தா பூர்வீக சொத்தைக் கொண்டு அதில் உள்ள வருமானத்தை கொண்டு கிரையம் பெற்றார். மேற்படி விவரங்கள் எனக்கு நேரடியாகவா, அல்லது செவிவழியாகவோ, அல்லது எழுத்து மூலமாக தெரியுமா என்றால் என் தந்தை மூலமாகவும், என் பாட்டி மூலமாகவும், ஆவணம் மூலமாகவும் தெரியும். வைராகவல்நாயுடு மகன்கள் எத்திராஜுலு நாயுடும், கோவிந்தநாயுடும், எப்போது சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் முதல் மனைவியின் மகன் கோவிந்தநாயுடும், இரண்டாம் மனைவியின் மகன் எத்திராஜுலு நாயுடும் பாகம் பிரித்தது தெரியாது, நான் பிறப்பதற்கு முன்னால் நடந்தது என்பதால் அதைப்பற்றி தெரியாது. அந்த பாகப்பிரிவினையானது வைராகவல்நாயுடு இறந்த பிறகு தான் நடந்திருக்கும் என்று சொன்னால் நான் பிறப்பதற்கு முன்னால் நடந்தது என்பதால் இதைப் பற்றி எனக்கு தெரியாது. ஒரு முறை ஒரு சொத்தை பாகம் பிரித்துக் கொண்டால் அந்த சொத்தானது அந்த பாகஸ்தரின் தனிப்பட்ட சொத்து என்று தான் அர்த்தம் என்று சொன்னால் அது இல்லாமல் copartionery rights உண்டு. copartionery rights என்றால் அந்த குடும்பத்தை சார்ந்த இரத்தம் சம்பந்தப்பட்டவருக்கு தான் இருக்கிறது என்று சொன்னால் copartionery rights என்றால் இரத்த சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் கிடையாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-1 ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன் பூர்வீகச் சொத்தை கொண்டு வாங்கிய கிரைய பத்திரம் ஆகும். மேற்படி வா.சா.ஆ.1 வாங்கும் போது நான் பிறக்கவில்லை என்று சொன்னால் 1962 வாங்குவதற்கு முன் நான் பிறக்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி சொத்து என்னுடைய முன்னோர்களுடைய சுய சம்பாதித்ததிலிருந்து வாங்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்று சொன்னால் இல்லை, தெரியாது. பொதுவாக ஒரு தந்தை இறந்து விட்டால் அவருடைய வாரிசுதாரர்கள் ஆண்மக்கள், பெண்மக்கள் அனைவரையும் தான் வாரிசு தாரர்களாக சேர்க்க வேண்டும் என்று சொன்னால் வாரிசு சான்றிதழில் சேர்க்கவேண்டும்.

**(வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)**